மக்களாட்சியின் மாண்பு குலையும் மாபாதகம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆவணி 16உ புதன் (1—9—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆவணி 17உ வியாழன் (2—9—54)	இதழ்: 68

பழிவாங்கும் படலம்!

வலையில் விழ மறுத்ததால் வந்த வம்பு!

பட்டம் தாணுவின் அடக்குமுறை பற்றி

நேசமணி அறிக்கை

நாகர்கோவில், ஆக. 31—

திரு—கோச்சியில், தமிழர்கள் மீது பட்டம் தாணு பிள்ளை வீசும் அடக்குமுறைகள் குறித்து, திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் தலைவர் நேசமணி விடுத்துள்ள அறிக்கையில், பழி வாங்கும் நோக்குடன் பட்டம் தாணு பிள்ளை, தமிழர்களைக் கொடுமைப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில், அவர், மேலும் கூறுவதாவது:—

"சென்ற தேர்தல் முடிந்ததும், பட்டம் தாணு பிள்ளை தலைமையில் மந்திரி சபை அமைக்கப்படுமென்று கூறப்பட்டது. பட்டம் தாணு பிள்ளை, தனது நண்பர்கள் மூலம் திரு.-த. நா. கா. தலைவரை அணுகி, சட்டசபையில் சபாநாயகர் பதவி அளிப்பதாகச் சொன்னார். எல்லாக் கட்சிகளையும் எதிர்த்து நின்று போட்டியிட்ட திரு.-த. நா. கா., எந்தக் கட்சியுடனும் சேரவோ, அல்லது எந்தக் கட்சிக்கும் கடமைப்பட்டிருக்கவோ விரும்பவில்லை. அவ்வாறு கட்டுப்படுவது ஒரு எதிர்க் கட்சியாக—சுயேச்சையாக இருப்பதை சீர்குலைத்துவிடும் என்று நினைத்தோம். எனவே, அவர்கள் அளிக்க முன்வந்ததை ஏற்க மறுத்தோம்; இது, அவருக்கு ஆத்திரமூட்டியிருக்கும்,

அதை அடுத்து, பல்வேறு [illegible] கமிட்டிகளுக்கு நிகழ்ந்த தேர்தல்களிலும், இந்திய மேல்சபைக்கு நடைபெற்ற தேர்தல்களிலும், தேவஸ்தான போர்டு தேர்தல்களிலும், திரு—த. நா. கா., அவருடைய விருப்பத்திற்கு மாறாகவே நடந்துகொண்டது; அதனால், அவரது கட்சி அபேட்சகர்கள் தோல்வியடைந்தனர். இது அவருக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியுள்ளது. ஆகையால், எங்கள் மீது விரோதம் கொண்டு பழிவாங்கத் தீர்மானித்தார்.

நிதி அமைச்சர் தமது முதல் வரவு—செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த நொய்யல் நதி, இடது கரை கால்வாய் வெட்டும் திட்டம் கைவிடப்பட்ட தென்பதைக் கண்டுபிடித்தோம், அடுத்தடுத்து, பல வரவு-செலவுத் திட்டங்களில் சேர்க்கப்பட்ட பாசனத் திட்டங்களும், குடிதண்ணீர் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை. பெரும்பாலும் அவை தமிழர் வாழும் பகுதிக்கே பயன்படக் கூடியவையாதலால், அவை வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை."

5 எம். எல். ஏ.-க்கள் உண்ணாவிரதம் இருப்பார்கள்

திரு—கோச்சி பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் வலுவடையுமா?

திருவனந்தபுரம், ஆக 31—

திரு—கொச்சி சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கத் தலைவர் டி. வி. தாமஸ், இடதுசாரிகளான நான்கு சட்டசபை உறுப்பினர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களுக்கு பொது மக்கள் ஆதரவைத் திரட்ட நாளை முதல் உண்ணாவிரதம் இருப்பார்கள் என்று கூறினர்.

டி. வி. தாமஸும் உண்ணாவிரதம் இருப்பார் என்று கூறப்படுகிறது.

தாங்கள் கைது செய்யப்பட்டால் சிறைக்குள்ளும் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பார்கள் என்று தாமஸ் கூறினார்.

போலீசார் — கொள்ளைக் கூட்டத்தார் கைகலப்பு

ஒரு போலீசார் மரணம்

கல்கத்தா, ஆக. 31—

கல்கத்தா நகரின் தெற்குப் பகுதியில் கொள்ளைக் கூட்டத்தினருக்கும், போலீசாருக்கும் இடையே கைகலப்பு நடைபெற்றதாம். இதில் ஒரு போலீசார் மரணம் அடைந்தார் என்று தெரிகிறது. கொள்ளைக் கூட்டத்தினரில் இருவர் படுகாயமுற்றனர் என்று தெரிகிறது.

போலீசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொள்ளைக் கூட்டத்தினர்தான் தாக்குதலை ஆரம்பித்தார்கள் என்று தெரிகிறது.

நேரு—கிரி சந்திப்பு

ராஜினாமா பற்றி யோசனை

புதுடில்லி, ஆக. 31—

இந்தியத் தொழில் அமைச்சர் வி. வி. கிரி இராஜினாமா செய்தமை பற்றி இன்று காலை பண்டித நேருவும், கிரியும் சந்தித்துப் பேசினார்கள் என்று தெரிகிறது; மீண்டும் அவர்கள் சந்தித்துப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

வி. வி. கிரி அவர்கள் தனது இராஜினாமாவைத் திரும்பப் பெற வேண்டுமென்று இந்திய அமைச்சர்களில் பலர் முயற்சி செய்கின்றனர் என்று தெரிகிறது.

'சீட்டோ' இரகசியம் வெளியாகியது!

அமெரிக்க நகலை மணிலா பத்திரிகை பிரசுரித்தது

மணிலா, செப். 1—

தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தம் பற்றி அமெரிக்கா தயார் செய்துள்ள நகல் ஒன்றை மணிலாவிலிருந்து வெளியாகும் அமெரிக்கப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

நாளை நடக்கவிருக்கும் சீட்டோ நாடுகள் மாநாட்டில் விவாதிக்கப்பட இருந்த திட்டம், முன்கூட்டியே வெளியானது கண்டு, அமெரிக்க ராஜதந்திரிகள் பரபரப்படைந்துள்ளனர்.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் டல்லஸ், தன் ஆலோசகர்களுடன் இதுபற்றி கலந்து பேசுகிறார் என்று தெரிகிறது.

'மணிலா புல்லட்டின்' என்ற பத்திரிகையில் 'சீட்டோ' பற்றி வெளியிடப்பட்டதை விசாரணை செய்யுமாறு மணிலா சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் ஈடன், இந்த மாநாட்டிற்குச் செல்லவில்லை; அவரது உதவி அமைச்சரான லார்டு ரீடிங் பிரிட்டிஷ் குழுவிற்குத் தலைமை வகித்துச் செல்வார் என்று தெரிகிறது.

பிரெஞ்சுக் குழுவிற்கு கைலா சேம்பர் தலைமை வகிப்பார் என்று தெரிகிறது.

மாபாதகம்!

—(:)—

அரசியல் பச்சோந்திகளை அணைத்துக்கொள்வதா?

வெற்றிக்கு அரசியல் — ஒழுக்கம் பலியாவதா?

துரோபதைக்கு துச்சாதனன் மஞ்சள் தடவும் நிலை!

திருச்சியில் பொதுச்செயலாளர்

ஒன்றுகூடி உழைப்போம்; ஆனால் கொள்கை வழி நிற்போம்!

இலங்கைத் தமிழருக்கு ஏற்றது செய்வோம்!

திரு-கொச்சி தமிழர் உரிமை காப்போம்!

"துகிலுரிந்த துச்சாதனன், பிறகு, துரோபதைக்கு மஞ்சள் அரைத்துக் கொடுப்பதுபோல, காங்கிரசைத் தேர்தலில் முறியடித்தவர்களைக் கொண்டே, இப்போது ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி தேடித் தரச் சொல்லும் கேவலமான அரசியல் நிலைமை வளர்ந்திருக்கிறது,"

என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 30—8—54 அன்று, திருச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருச்சி பெரிய கடை வீதி தி. மு. கழக ஆண்டு விழா பொதுக்கூட்டம் 30—8—54 மாலை 6 30 மணியளவில் திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்றது

கூட்டத்திற்கு தோழர் எம். எஸ். மணி தலைமை தாங்கினார். தோழர்கள் மதுரை என். முத்து, அ. பொன்னம்பலனார், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசியபின், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொண்ட கூட்டம் மைதானம் முழுதும் நிரம்பி வழிந்தது.

தலைவரின் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

• • •

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குடியேற்றம் தேர்தலில் காமராசர் வெற்றி பெற்றதை ஒட்டி நாட்டவரிடையே ஒரு அரசியல் மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. குடியேற்றம் தேர்தலுக்கும் பிறகு, காமராசருக்கும்—தி. மு. கழகத்திற்கும் ஏதோ ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூட கம்யூனிஸ்டு நண்பர்கள் பேசுவதாகக் கேள்விப்பட்டேன்; அவர்கள் அப்படிப் பேசுவது உண்மையானால், அதற்காக நான் வருந்துகிறேன்.

காமராசர் என்னைக் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாகவும், எனவே, நான் அவரை குடியேற்றம் தேர்தலில் ஆதரிப்பதாக வாக்குக் கொடுத்ததாயும் நண்பர்கள் பேசுகிறார்களாம்.

கைத்துப்பாக்கிக்கே நான் அஞ்சிவிடுவேனானால், அதைவிடப் பயங்கரமான ஆயுதங்களைக் கையாளும் துணிவு கொண்ட கம்யூனிஸ்டுகளிடம் நான் என்ன ஆவது?

இப்படிப்பட்ட கற்பனைகளை எல்லாம் சொல்லி, வளர்ந்து வருகிற ஒரு இயக்கத்தை அழித்துவிடலாம் என எண்ணுவது மிகத் தவறானது. அதுவும் ஒரு கட்சியின் பொறுப்பான தலைவர்—பொதுவுடமை காண்பதற்கும் பாடுபடுபவர்—சட்ட நுணுக்கங்கள் பற்றிப் பேச சட்டசபைக்குச் சென்றிருப்பவர் பேசுவது, மிகத் தவறானது!

குடியேற்றம் தேர்தலில் தங்களை ஆதரிக்குமாறு கம்யூனிஸ்டு நண்பர்கள் என்னிடம் கேட்கவில்லை; கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் அது பற்றி என்னிடம் கலந்து உரையாடவும் இல்லை; அவர்கள் கட்சித் தலைமை எந்தவித வேண்டுகோளையும் எங்கள் முன் வைக்கவில்லை.

'கேட்டிருந்தால் ஆதரித்திருப்பீர்களா?' என்று கேட்கக்கூடும்; கேட்டிருந்தால், ஆதரித்திருக்கக் கூடும் — சில நிபந்தனைகளின் பேரில்!

சென்ற பொதுத் தேர்தலில் கேட்டதுபோன்று, திராவிடநாடு பிரச்சினை பற்றி சட்டசபையில் பேசுவதாக ஒப்பியிருந்தால், தி. மு. கழகம் அவர்களை குடியேற்றம் தேர்தலில் ஆதரித்திருக்கும்.

பெரியார் ராமசாமி அவர்கள்கூட, காமராசரை ஆதரிப்பதாகக் கூறினாரே அன்றி, காங்கிரசை ஆதரிப்பதாகக் கூறவில்லையே!

மதுரையில் காமராசர் பேசியிருக்கிறார் — 'கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்ட எல்லாக் கட்சியினரும் ஒன்றுபடுங்கள்,' என்று! வருகிறோம் என்று

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 1—9—54 புதன்

எல்லாத் துறையிலுமிருக்கின்றனர்!

"அரசியலில் ஜனநாயகம் வேரூன்ற வேண்டும்."

"பொருளாதாரத் துறையில் 'சமதர்மம்' நிரந்தரமாக்கப்பட வேண்டும்."

"சமுதாயம் பேதமற்றதாக்கப்பட்டு, 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்பட வேண்டும்."

நாட்டிலே நாம் செய்ய விரும்புவது, இந்த மூன்று காரியங்கள்தான்; ஏற்றத் தாழ்வற்ற சமுதாயமும், சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சியும் தான் தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் இன்பமளிக்கும் என்று நம்புகிற காரணத்தால்!

ஆண்டாண்டுகளாக மனிதன் அனுபவித்த அரசியல் மாற்றங்களில், கடைசியாக மிஞ்சிய மிக நல்ல அரசியல் முறை மக்களாட்சி!

நாட்டிலே எந்தப் பொதுக் காரியத்தையும், பெரும்பான்மையினர் விருப்பமின்றி செய்யக்கூடாது என்பதே மக்களாட்சியின் அடிப்படைக் கொள்கை!

எந்த மாற்றங்களையும் இரகசியமேதுமின்றி, மக்கள் மன்றங்களில் வைத்து, மக்கள் ஒப்புதல் கிடைத்தவுடன் தான் செயல் முறையில் கொண்டுவர வேண்டும்!

ஆகவேதான், நாமும், நமது கொள்கைகளை மக்கள் மன்றத்திலே வைத்து அவர்களுடைய பெருவாரியான ஒப்புதலை எதிர்பார்த்து நிற்கிறோம். நாள் ஒரு, ஒட நமது நம்பிக்கையும் பெருகி வருகிறது.

'முன் செய்த தீவினை,' என்று கர்மாவின் சக்தியைப் பற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயம் இது!

'ஏழை—பணக்காரன், அவனவன் செய்த புண்ணியத்தின் விளைவு' என்று நம்புவர்!

'அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்,' என்று விதவையைக் கண்டு பெருமூச்சு விடுவரே தவிர, 'அவளுக்கு மறுமணம் செய்வது மகா பாவம்' என்று எண்ணுவர்!

எண்ணற்ற ஜாதிகள்! அவைகளுக்குள் ஏராளமான ஜாதிச் சண்டைகள்!!

மொத்தத்தில் மிகவும் பிற்போக்கான சமூகம்! இருபதாவது நூற்றாண்டிலே 15-ம் நூற்றாண்டின் நிலை!

ஆனால், இந்தச் சமுதாயம் எந்தக் காலத்திலும் இப்படி இருந்ததா என்றால், அதுதான் இல்லை!

நாடாண்ட இனம் இது! இதன் மக்கள் சாவகத் தீவிலே வெற்றிக் கொடி நாட்டி நடந்தனர்! வெளிநாடுகளிலே வியாபாரம் செய்து வந்தனர்! அகத்தையும் புறத்தையும் உண்டாக்கி விருந்தினர்! வள்ளுவன் வாழ்ந்திருந்திருக்கிறான்; இளங்கோ இருந்திருக்கிறான்!

இருந்தும், ஏன் இந்த நிலைக்கு வந்தது இந்த நாடு? நாடாண்ட இனம் ஏன் அடிமையாகியது; வாழ்வை இழந்தது; கடைசியில், 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா!' என்ற சோம்பேறி வேதாந்தம் பேச ஆரம்பித்து விட்டது!

நாட்டிலே மறுமலர்ச்சியுண்டாக்க முனைந்துள்ள நாம், இந்தச் சமுதாயம் இப்படிக் கெட்டதற்குக் காரணங்களை விளக்க வேண்டியவர்களாகிறோம். நம் முன்னோர்கள் வாழ்ந்ததை எடுத்துக் காட்டி, நாம் வாழும் பிற்போக்கான நிலையையும் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாம் வாழப் போகும் வரும் காலத்தையும் காட்ட வேண்டியது நம் கடமையாகிறது.

மத மாச்சரியம் கொக்கரித்ததால், ஏழை கரங் கட்டுண்டதும், நிலச்சுவான்தாரின் அக்கிரமமான நிலையும் காட்டு மக்களுக்கு நன்கு புரியும்; இல்லாவிட்டால், என்னதான் காடியாகக் கத்தினாலும், 'எல்லாம் அவன் செயல்,' என்ற தத்துவம், நமது வேலையைப் பயனற்றதாக்கி விடும்!

வரலாற்றிலே இதற்கான ஆதாரங்களைக் காண்கிறோம்.

ஐரோப்பாவிலே மக்கட் சமுதாயம் முன்னேறியிருக்கிறதென்றால், அதற்குக் காரணம், "மத சீர்திருத்த இயக்கம்—மார்ட்டின் லூதர்"; "மறுமலர்ச்சி—அந்தச் சமயத்திலே தோன்றிய எண்ணற்ற விஞ்ஞானிகள், கவிஞர்கள், கலைஞர்கள்"; இதற்கு அடுத்த கட்டமாக வால்டேர், ரூசோ, டெட்ராய்ட் — அவர்கள் எழுத்தின் பலனால் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சி; அதற்கும் பின் நெப்போலியனுக்கு பயந்து எழுந்த ஐரோப்பிய தேசிய உணர்ச்சி; கடைசியில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யப் புரட்சி—இப்படி ஒவ்வொன்றாக நடைபெற்றன; அங்கே மனித சமுதாயம் படிப்படியாக வளர்ந்திருக்கிறது.

இங்கே, எவ்வளவு நூற்றாண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த மக்கள்!

மிகப் பெரும்பாலானவர் படிப்பு வாசனையற்றவர்! மத நம்பிக்கை மிகுந்திருக்கிற காரணத்தினாலே, சிலர், தாங்கள் கொண்டதே கோலமென்று நம்பிக்கையோடு கூட இருப்பர்!

இன்று நாட்டிலே இருக்கும் மத சம்பிரதாயங்களை, ஜாதி மக்கட் தொகையான பெண்களை, இருட்டறையில் பூட்டி வைக்கிறது!

இந்தச் சூழ்நிலையில், ஜனநாயகமாவது — சமதர்மமாவது—எங்கிருந்து உண்டாகக் கூடும் என்ற நாம் சந்தேகம் தோன்றும்!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவிக்கும்போது, தோன்றுமலா இருந்திருக்கும்!

எத்தனையோ இடைஞ்சல்கள்; சொல்லடிகள்; கல்லடிகள்! ஆனால், எல்லாவற்றையும் புன்னகையோடு தாங்கிக்கொண்டு நாம் முன்னேறியிருக்கிறோம்.

'நாம்' என்று கூறுவதின் அளவு, பெருகிக்கொண்டே இருக்கிறது! நம்மைச் சேர்ந்தவர்கள், நாட்டினர் என்ற எண்ணம் வளர்கிறது! நமது கொள்கை, நாம் விளக்கிய மறுமலர்ச்சி எண்ணங்கள் எல்லாம், மக்களை நீண்ட உறக்கத்திலிருந்து எழுப்பி இருக்கின்றன!

இன்று, நாட்டிலே ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், 'நாம்' காட்சியளிக்கிறோம்!

நாட்டின் பட்டிதொட்டிகளிலும் நம் கழகத் தோழர்களின் சொற்பொழிவுகள், நாள்தோறும் நடந்தவண்ணமிருக்கின்றன!

நமது தோழர்களின் எழுத்துக்கள், எண்ணற்றவரின் மனதிலே சிந்தனையைக் கிளறியவண்ணமிருக்கின்றன!

நமது தோழர்களின் கவிதைகள், மக்களை மறுமலர்ச்சிப் பாதையில் அழைத்து வருகின்றன!

நமது தோழர்களின் நாடகங்கள், மக்களிடையே புரட்சி எண்ணத்தை உண்டாக்கி இருக்கின்றன!

நமது தோழர்களின் சினிமாக்கள், நாட்டில் பெரியதொரு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன!

இப்படி, நம் தோழர்கள், இன்று எல்லாத் துறைகளிலுமிருக்கின்றனர்! மக்கள் மனதை சீர்படுத்தும் எல்லாத் துறைகளிலும் நம் தோழர்களின் அறிவுப் பிரச்சாரம் நடைபெறுகிறது!

ஆனால், மக்கள் மன்றமேறினாலும், எழுதுகோல் பிடித்தாலும், நாடக மேடையில் தோன்றினாலும், சினிமாவிலே காட்சியளித்தாலும், அலுவலகங்களிலே ஊழியம் புரிந்தாலும், எந்தத் துறையின் பணியாற்றினாலும், அந்தத் துறையிலே அவர்கள் லயித்து, எடுத்துக்கொண்ட வேலையை மறந்து விடுவதில்லை! அந்தந்தத் துறையிலே இருக்கும் பழமை விரும்பிகளோடு போரிடுகின்றனர்! நாட்டு மக்களுக்கு அந்தப் பிற்போக்குவாதிகள் செய்யும் நஞ்சினைக்களைந்து மறுமலர்ச்சி எண்ணத்தைத் தூவுகின்றனர்! பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவுவதற்கு கால்கோல் விழா நடத்தியவண்ணமிருக்கின்றனர்!

ஆம்! எல்லாத் துறையிலும் நம் தோழர்கள் இருக்கின்றனர்; ஆனால், எந்தத் துறைக்கும் தங்களை அர்ப்பணித்து விடுவதில்லை!

அவர்கள் எண்ணமெல்லாம், தங்கள் செயலின் பலன், முடிவில், தி. மு. கழகத்தின் உயர்ந்த லட்சியத்திற்கு வந்து சேரவேண்டுமென்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்!

இந்த அரிய கருத்துக் குருடர்கள், விபசாரம் ஒழிக்கப்பட வேண்டுமானால், எல்லோரும் ஆயுள் பூராவும் பிரமச்சரியம் கடைபிடியுங்கள் என்று, உலகத்திலே என்றுமே நடக்க முடியாத தத்துவம் உபதேசிப்பதுபோல, நாடகம் வேண்டாம், சினிமா வேண்டாம்,' என்றெல்லாம் கூறுவர்; பல்வேறு கலைத் துறைகளில் இருக்கும் நமது தோழர்களைக் குறைவாகப் பேசுவர்; எழுதுவர்.

வாதத்திற்கும், கருத்துக்கும் ஒத்துவராத இந்த வசை மொழி பேசும் வம்பர்கள் நமது தோழர்களின் அடிப்படை ஒற்றுமையையும், அவர்களுடைய செயலினால் கொள்கைக்குக் கிடைத்திருக்கும் இலாபத்தையும் உணருவதில்லை.

நமது தோழர்கள் கலைத் துறையில் நுழைந்த பின், சென்ற பத்து ஆண்டுகளில், வந்திருக்கும் புராணப் படங்கள் எவ்வளவு? அதற்குமுன் பத்து ஆண்டுகளில் வந்த புராணப் படங்கள் எவ்வளவு?

நாடகங்களில், சமூக நிகழ்ச்சி நாடகங்கள் எவ்வளவு? புராண நாடகங்கள் எவ்வளவு?

இந்த நாட்டிலே, பத்து ஆண்டுகளுக்கு முன், எல்லா மக்களுக்கும் புராணங்கள் தெரியக் காரணமே இந்த நாடகமும், சினிமாவும், மேடையும் எழுத்தும்தான்! ஆனால், இந்தப் பத்து ஆண்டுகளில், வளரும் பாலம் பலருக்கு, நூற்றுக்கணக்கான புராணங்கள் தெரியாது! காரணம், அவன் 'வள்ளி மகாராசா' கதையும், சிலதனி நாடகமும் பார்ப்பதில்லை!

படிக்கவன், தேடிப் படித்தால் ஒழிய, அவன் வீடு தேடி அவனுக்கு புராண மகிமை விளக்கும் புத்தகமோ, பிரசங்க பூஜையோ வருவது இல்லையாது;

நாட்டிலே நமது தோழர்கள் ஏற்படுத்தியிருக்கும் மாற்றத்தை, பொறுமையையும் பொச்சரிப்பையும் ஒரு பக்கம் வைத்துவிட்டுப் பார்த்தால் தான் தெரியும். ஆனால், 'அது'களுக்கு ஏனோ அந்த அளவு சிந்தனை மழுங்கி விட்டது!

ஆனால், அவர்களைப் பற்றி கவலைப்பட நமக்கு நேரமில்லை! நமக்கோ, வேலை நிறைய இருக்கிறது! ஆகவே, முன்னிலும் கடுமையாக இப்போது வேலை செய்ய வேண்டும்!

ரஷ்யப் புரட்சியே நாடகாசிரியர்களாலும், கவிஞர்கள் கதாசிரியர்களாலும் வித்திடப்பட்டது!

பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமே வால்டேரும், ரூசோவும் எழுதிய எழுத்துக்கள்தான்!

ஆகவேதான், நம் தோழர்கள் எல்லாத் துறையிலும் இருக்க வேண்டும்; இல்லை, முழுத் திறமையையும் காண்பித்து முன்னேற வேண்டும்!

எல்லாத் துறையிலும் உண்டாக்கப்படும் புரட்சி எண்ணங்கள், முடிவில புயலாகி, பழமையை ஓட்டும்! வடநாட்டு முதலாளித்துவத்தை முறியடிக்கும்! திராவிடத்தை உருவாக்கும்! உண்மை மக்களாட்சியை நிறுவலாம்; சமதர்மம் நிரந்தரமாக்கப்படலாம்; பேத பேதமற்ற சமுதாயத்தை காணலாமாகலாம்!

இவைகளைத்தான், சென்ற இதழ்களில் நடந்த காஞ்சி மாநாட்டிலும் தலைவர்கள் விளக்கினார்கள். நாட்டு மக்களும், நமது தோழர்களும் குறித்துக்கொள்ள வேண்டிய அறிவுரை!

அவர்கள் காட்டும் அன்பு!

கைத்தறி பற்றிய விவாதத்தின்போது 35 பேர் கலந்து கொண்டார்களாம்!

இந்தியப் பாராளுமன்ற மக்கள் சபையில், வேட்டி, புடவை ஆகியவைகளின் உற்பத்தி, கைத்தறிகளுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்ற உத்தியோகப் பற்றற்ற தீர்மானம் விவாதிக்கப்படுகையில் 500 பேர் கொண்ட மக்கள் சபையில், 35 பேர்தான் இருந்தார்களாம்! சபையில் 'கோரம்' இல்லாது போகவே மணியடிக்கப்பட்டதும், 15 உறுப்பினர்கள் உள்ளே வந்தார்களாம்!

மற்ற உறுப்பினர்கள் அனைவரும் மேல் சபையில் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்ந்து கொண்டு, பண்டித நேரு, வெளிநாட்டுக் கொள்கை விவாதத்திற்குப் பதில் அளிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தார்களாம்!

மத்திய கிழக்கு ஒப்பந்தம்

எகிப்து விரும்பவில்லை

மத்திய கிழக்குப் பாதுகாப்பிற்கான ஒப்பந்தம் எதிலும் அரபு நாடுகள் சேர விரும்பவில்லை என்றும், சூயஸ் ஒப்பந்தமானது மேற்கத்திய நாடுகளின் திட்டமுறையின் காவலைக் குறித்ததை விடைகாட்ட முயற்சிப்பதற்கு ஒப்பாகும் என்றும் எகிப்து பிரதமர் அப்துல் நாசர் கூறினார்.

மத்திய கிழக்கின் பாதுகாப்பிற்கான ஒப்பந்தமொன்றில் மேற்கத்திய நாடுகள் ஏதேனும் பங்கேற்று மானால், அது சமாதான உலகிற்கு ஆபத்தை விளைவிக்குமென்றும், ஏனெனில், அந்த முயற்சியின் மூலம் கம்யூனிஸ்ட் விழிப்படைந்து தொல்லை தர சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

அருகில்—மத்தியதரை ஒப்பந்தத்திற்கும் கூட நடுநிலைமையே பொருந்துமென்று நாசர் கூறினார்.

அருகில், 'கேட்டோ' நாடுகளின் ஒன்று; இந்த ஒப்பந்தத்தின் காரணமும், காரணமும் செக்க முயற்சிப்பது, அரபு லீகிலிருந்து ஈராக் வெளியேறும்படியான சூழ்நிலையை உண்டாக்குமென்று அவர் மேலும் கூறினார்.

—அமெரிக்க இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் நாசர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தோ—சீனப் போரின் அழிவு!

எட்டு ஆண்டுகளாக நடைபெற்ற இந்தோ—சீனப் போரில், 4 66,172 பேர் பிரெஞ்சுக் காரர்கள் கொல்லப்பட்டும், சிறை பிடிக்கப்பட்டும் காணாமலும் போயினர் என்று விபட்டின் வானொலி நிலையம் அறிவித்தது.

பிரெஞ்சுக்காரர்களின் கணக்குப்படி 92,000 பிரெஞ்சுக்காரர்கள் மரணமடைந்தனர் என்றும், 40,172 பேர் காணவில்லை என்றும், ஒருவேளை இவர்கள் வியட்மின் அருப்புகளால் சிறை பிடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

டெபுடி போலீஸ் சூப்ரண்டெண்ட் சாட்சியம்

வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை

20—8—54ல், சர்க்கார் தரப்பில், 13-வது சாட்சியாக செல்வநாதன் விசாரிக்கப்பட்ட பொழுது, சாட்சி கூறியதாவது:

"நான் தூத்துக்குடி குரூஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர்; 15—7—53ல், மீளவிட்டான் ரயில்வே ஸ்டேஷனில் பந்தோபஸ்தாக இருந்தேன்; காலை 10 மணிக்கு கோயமுத்தூர் பாசஞ்சர், மீளவிட்டான் வந்தது; அந்த வண்டி எஞ்சினின் முகப்பு கண்ணாடி உடைந்து இருந்தது; எஞ்சின் உள்ளே கற்களாக இருந்தது; உடைந்த கண்ணாடி, கற்களைக் கைப்பற்றி அத்தாட்சி செய்தேன்; ரயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு அவைகளை அனுப்புவைத்தேன்; பகிரங்க விசாரணை கமிட்டியில் அவைகளை அடையாளம் காட்டினேன்."

✱

சர்க்கார் தரப்பில் 14-வது சாட்சியாக டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட் விசாரிக்கப்பட்டபொழுது கூறியதாவது:

15—7—53ல், நான் தூத்துக்குடியில் டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டாக இருந்தேன்; எனக்கு தூத்துக்குடி தி. மு. க.-வைத் தெரியும்; அதிலுள்ள முக்கியமான ஆட்களையும் எனக்குத் தெரியும்; அவர்களில் கே. வி. கே. சாமி, ரத்தினம், தங்கப்பழம், சிவசாமி, நடராசன் முக்கியமானவர்கள்; நடராசன்தான், தூத்துக்குடி கழகக் காரியதரிசி; தூத்துக்குடி தி. மு. கழகத்தினர், 15-ந்தேதியன்று ரயில் நிறுத்தம் செய்யப் போகிறார்களென்று எனக்குத் தெரிந்தது; முந்திய நாள் 14—7—53-ல், நான், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜுவை, மேலே கூறப்பட்ட தலைவர்களைக் கைது செய்யும்படி உத்திரவிட்டேன்; 151-வது செக்ஷன்படி நடவடிக்கை எடுக்கச் சொன்னேன்; கே. வி. கே. சாமி, ரத்தினம் இரண்டுபேரையும் 14-ந் தேதி இரவு 2 மணிக்கு அவர் கைது செய்தார்; மற்றவர்கள் காணப்படவில்லை; அவசியமான பந்தோபஸ்துக்கு, எல்லா ரயில்வே நிலையங்களிலும் ஏற்பாடு செய்தேன்; நான், தூத்துக்குடி மேலூர் ஸ்டேஷனுக்கு 15-ந் தேதி காலை 6 மணிக்குப் போனேன்; சப்-இன்ஸ்பெக்டர் மாமன்னன் ஸ்டேஷனுக்கு பந்தோபஸ்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்; அவர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சார்ஜில் அன்று இருந்தார்; இன்ஸ்பெக்டர் ராஜு, அன்றைய தினம் திருநெல்வேலிக்குச் சென்றுவிட்டதால். தங்கப்பழமும், சிவசாமியும் மேலூர் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காலை 6-30 மணிக்கு நின்றார்கள்; அவர்கள், ரயிலை நிறுத்தும்படி தொண்டர்களுக்கு கூறிக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் பிளாட்பாரத்திலே கைது செய்யப்பட்டார்கள்; 6-20-க்கு ரயில் புறப்பட்டது; இன்ஸ்பெக்டர் மாமன்னனும் அவர் குழுவினரும் வண்டி பாதுகாப்புக்குப் போனார்கள்; வண்டி, மேலூர் போவதற்குள் 4 தடவை நின்றது; சங்கிலியைப் பிடித்து இழுத்ததால் வண்டி நிறுத்தப்பட்டது என்று அறிந்தேன்; 33 பேர் கைது செய்யப்பட்டார்கள்; அவர்கள் பிளாட்பாரத்தில் நின்ற என்னிடம் கொண்டுவரப்பட்டார்கள்; கைது செய்யப்பட்டவர்களை, தங்கப்பழம், சிவசாமியுடன் கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனேன்; ரிமாண்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தேன்; மேலூருக்கு நான் போனபோது சுமார் 7 மணிக்கு, வண்டி ஸ்டேஷனுக்கு 150 கஜ தூரத்தில் நின்றுகொண்டிருந்தது; நடராசனும், சுமார் 2000 பேரும் ரயில்வே லைனில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்; ரயிலைப் போகவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தார்கள்; 2000 பேர் இருபுறமும் இருந்தார்கள்; அவர்கள் கோஷங்கள் செய்து ஆரவாரமிட்டார்கள்; நான், நடராசனை, தொண்டர்களைப் போகச் சொல்லும்படி கூறினேன்; நடராசன், '8½ மணிக்குப் போவார்கள்' என்று கூறினார்; உடனே நான் சப்-கலெக்டருக்குப் போனில் கூறினேன்; அவர் 7½-மணிக்கு வந்துசேர்ந்தார்; சப்-கலெக்டரும் நடராசனிடம், போகும்படி சொன்னார்; அவர் மறுத்துவிட்டார்; நான் நடராசனைக் கைது செய்தேன்; அதோடு விஜயராகவன், மற்றும் நான்கு பேரையும் கைது செய்து லாரியில் ஏற்றினேன்; அதனாலும் பலன் இல்லை; கலெக்டர், தடியடிப் பிரயோகம் செய்ய உத்திரவிட்டார்; கூட்டம் கல்லெறிந்தது; தடியடிப் பிரயோகம் நிறுத்தப்பட்டது; ஜில்லா கலெக்டர் 8 மணிக்கு வந்து சேர்ந்தார்; அவரும், நடராசனைக் கூப்பிட்டுப் பேசினார்; கலெக்டரும் கலைந்து போகும்படி சொன்னார்; கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யப்பட்டால் போய்விடுவார்களென நடராசன் கூறினார்; கலெக்டர் கைது செய்தவர்களை விடுதலை செய்யச் சொன்னார்; நடராசன், உட்கார்ந்திருந்தவர்களைக் கலந்து பேசினார்; நடராசன். கூட்டத்தானுள் போனவர் திரும்பி வரவில்லை; கலெக்டர், டிப்டி தாசில்தாரை அனுப்பி, நடராசனைக் கலந்து பேசச் சொன்னார்; டிப்டி தாசில்தார் போய் பேசிவிட்டுத் திரும்பிவந்தார்; 'அவர்கள் மாலை 5-30 மணி வரை உட்கார்ந்திருப்பார்களாம்; போகமாட்டார்களாம்,' என்றுகூறினார்; உடனே நான் மேலூரிலிருந்த மலபார் போலீசை வரவழைத்தேன்; கலெக்டர், தடியடிப் பிரயோகம் செய்ய உத்திரவிட்டார்; ரிசர்வ் போலீஸ், ஆண்டாள் தெருவில் இருந்தது; மலபார் விசேடப் போலீஸ், எஞ்சினுக்கும்—உட்கார்ந்திருந்தவர்களுக்கும் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது; மலபார் போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது; கல்லெறி பலமாக இருந்தது; கல்லெறி, போலீஸ் அதிகாரிகள்மீது விழுந்தது; கூட்டம் பலாத்காரத்தில் இறங்கி, முன்னேறி வர ஆரம்பித்தது; கலெக்டர் என்னிடம் கலந்த பிறகு, சுடுவதற்கு உத்தரவிட்டார்; ரிசர்வ் போலீஸ், "கூட்டத்தார்களே, நீங்கள் கூடியிருப்பது, சட்ட விரோதமான கூட்டம்; ஓடிவிடுங்கள்; போகாவிட்டால் சுடுவோம்; சுட்டால் உயிர்ச்சேதம் ஏற்படும்; ஓடிப் போங்கள், ஓடிப் போங்கள், ஓடிப் போங்கள்"—என்று எச்சரிக்கை கொடுத்தது; கூட்டம் கலையவில்லை; போலீசை நோக்கி முன்னேறியது; ரிசர்வ் போலீஸ் 16 ரவுண்டுகள் சுட்டது; மேற்கு நோக்கி சுட்டார்கள்; அடுத்த பக்கம் கூட்டம் மலபார் போலீசை நோக்கி தென்மேலாக முன்னேறியது; மலபார் போலீசும் எச்சரிக்கை செய்துவிட்டு, சுட உத்திரவிடப்பட்டது; அதே எச்சரிக்கை கொடுக்கப்பட்டது; மலபார் போலீஸ் 8 ரவுண்டுகள் சுட்டது; கூட்டம் கலைவது போலத் தெரிந்ததால் சுடுவதை நிறுத்தச் சொன்னேன்; லைனில் இருந்தவர்கள் போய் விட்டார்கள்; வண்டி புறப்பட்டது; அந்த இடத்தில் 3 பேர் இறந்து போனார்கள்; 17 பேர் காயப்பட்டார்கள்; ஒருவர் ஆஸ்பத்திரியில் இறந்துபோனார்; மில் டாக்டர் ரங்கசாமி பிள்ளையை அழைத்துவரச் செய்து காயப்பட்டவர்களுக்கு, முதல் சிகிச்சை செய்தேன்; சப்-கலெக்டருடன் புதுக் கிராமத்துக்குப் போனேன்; புதுக் கிராமத்தில் பந்தோபஸ்து ஏற்பாடு செய்தேன்; எட்டையபுரம் லெவல் கிராசிங்கிற்குப் போனேன்; இரண்டு ரயில் கட்டை எரிந்து இருப்பதைக் கண்டேன்; 19 ஆணிகள் அகன்று இருப்பதையும் பார்த்தேன்; தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டு இருந்தன; தீ அணைக்கும் படை— தீயை அணைத்திருந்தது; 11-30 மணிக்கு ரயில்வே பாலத்துக்குப் போனேன்; நான் சி. ஐ. கிருஷ்ணப்பருக்கு விளாத்திகுளத்துக்கு தந்தி கொடுத்து, வரும்படியும், வந்து இந்தச் சம்பவங்களை வழக்குப் பதிவு செய்யும்படியும் ஏற்பாடு செய்தேன்; நான் தூத்துக்குடியில் 2 வருடமாக இருந்திருக்கிறேன்."

சாட்சியை எதிரிகள் சார்பாக வழக்கறிஞர் எம். செல்லையா பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:

"சம்பவத்துக்கு 1½ ஆண்டுக்கு முன்னாலே 1-லிருந்து 5 எதிரிகளும் எனக்குத் தெரியும்; அவர்கள் தூத்துக்குடியில் முக்கிய தலைவர்கள்தான்; எனக்கு தி. மு. க. ஆபீஸ் தூத்துக்குடியில் தெரியாது; 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னால், ரயில் நிறுத்தம் நடைபெறப் போவது எனக்குத் தெரியும்; சுவர்களிலும், போஸ்டர்களிலும் 15-ந் தேதி நடக்கப் போகும் ரயில் நிறுத்தம் பற்றி எழுதியிருந்தது; அதனால், தூத்துக்குடி மக்களுக்கு பகிரங்கமாக ரயில் நிறுத்தம் பற்றித் தெரியும்; இதுபற்றி பத்திரிகைகளிலும் வந்திருந்தது; தமிழ், ஆங்கில தினசரிகளிலும் வந்திருந்தது; 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னாலே தெரிந்தும், தி. மு. க. ஆபீசில் போய்ப் பார்க்க வேண்டுமென்று எனக்கு அவசியமில்லை; 1-லிருந்து 5 எதிரிகள், ரிக்கார்டு பூர்வமாக தலைவர்கள் என்று கூற முடியாது; ஆனால், கூட்டம் போட லைசென்ஸ் வாங்குவதற்கு என்னிடம் இந்த 5 எதிரிகளும் வந்திருக்கிறார்கள்; ரிக்கார்டுகள் ஆபீசில் இருக்கலாம்; காரியதரிசி தவிர, மற்றவர்களும் லைசென்சுக்கு மனுச் செய்திருக்கிறார்கள்; 12—7—53ல், ஒரு தி. மு. க. கூட்டம் இருந்தது; நான் அந்தக் கூட்டத்துக்குப் போகவில்லை; அந்தக் கூட்டம், ஜவஹர்லால் நேரு, தமிழர்களை துச்சமாகப் பேசியதைக் கண்டிக்கு முகத்தான் நடத்தப்பட்டதென்பதும் ஒரு காரணமாகும்; மற்ற நோக்கமும் அந்தக் கூட்டத்தில் உண்டு; 12-ந் தேதி கூட்டத்தை, போலீஸ்காரர்கள், என்ன நடக்கிறது என்று கண்காணித்ததாக என்னால் கூறமுடியாது; அந்தக் கூட்டம் பற்றி 16—7—53-ல் போலீசார் எனக்கு ரிப்போர்ட்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐந்தாண்டுத் திட்டத்தில் கர்னாடகம் புறக்கணிக்கப்பட்டது!

— (:) —

இராஜ்யப் புனரமைப்புக் குழுவிடம் கர்னாடக உறுப்பினர்கள் அறிக்கை!

உடனே தனி இராஜ்யம் அமைக்க வற்புறுத்தல்

வடநாட்டு சர்க்கார் திராவிடத்தின் மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் சர்க்காரின் புதிய திட்டங்கள் அனைத்தும் வடநாட்டை வளப்படுத்தவே பயன்படுகின்றன.

தென்னாடு அலட்சியப்படுத்தப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்று கூறுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிறது.

ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷனிடம் கர்னாடக மக்கள் குழு ஒன்று, காங்கிரஸ் ஆட்சியில், தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டியுள்ளது.

பூனாவில் சென்ற வெள்ளிக்கிழமையன்று ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனை கர்னாடக நாட்டுக் குழுவினர் சந்தித்து கர்னாடக ராஜ்யம் உடனே அமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

பம்பாய் சட்டசபையின் உதவி சபாநாயகர் எஸ். ஆர். காந்தி, அக்குழுவிற்குத் தலைமை தாங்கினார்.

கர்னாடக மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான கர்னாடக ராஜ்ய அமைப்புக்கு ஏற்பாடு செய்வது அவசியம் என்றும், அப்பொழுதுதான் கர்னாடக பகுதிகள் முன்னேற்றம் அடைய இயலும் என்பதை வற்புறுத்தினார்கள் என்றும் தெரிகிறது.

இப்போது பல ராஜ்யங்களில் சிதறிக் கிடக்கும் கர்னாடகப் பகுதிகள், எல்லாத் துறைகளிலும் பின் தங்கிய பிரதேசங்களாகக் காட்சியளிக்கின்றன என்றும், ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பகுதிகள் அலட்சியப் படுத்தப்பட்டிருக்கின்றனவாகையால், தனி இராஜ்ய அமைப்புதான் இப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வாய்ப்பளிக்கும் என்பதையும் அக்குழுவினர் ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷனிடம் வற்புறுத்தினார்கள் என்று தெரிகிறது.

இந்தி வெறியர்களின் விபரீதப்போக்கு

டில்லியில் தெ. இ. உறுப்பினர்கள் திகைப்பு

போர்டுகள் அனைத்தும் இந்தியில் காணப்படுகின்றன

இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டுமென்ற எண்ணம் வடக்கே ஒரு வெறியாக மாறிக் கொண்டு வருகிறது!

அரசியல் சட்டத்திற்குப் புறம்பான முறையில், பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலே, 'ராஜ்ய சபா,' 'லோக சபா' என்று பெயரிட்டு வருகின்றனர்.

டில்லியில் உள்ள பாராளுமன்ற அலுவலகங்களின் போர்டுகள் ஆங்கிலம், இந்தி என்ற இரண்டு மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன; இப்போது, அங்கேயும் இந்தி வெறியர்கள் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டனர் என்று தெரிகிறது!

இந்திய மக்கள் சபையில் உள்ள அறிவிப்புகள், போர்டுகள் அத்தனையும் இந்தியில் மாற்றப்பட்டுவிட்டதாம்!

இப்போது நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்திற்கு வந்த தென்னாட்டு உறுப்பினர்கள் பலர், இந்திக்கு திடீரென அங்கே கிடைத்திருக்கும் நிலையைக் கண்டு திடுக்கிட்டார்கள் என்று தெரிகிறது!

இந்தி மொழி தெரியாத பல தென்னாட்டு உறுப்பினர்கள், என்ன செய்வது என்று அறியாது, இந்தியினால் ஏற்படப்போகும் தொல்லைகள் பற்றி கவலைப்படுகிறார்கள் என்று தெரிகிறது!

தென்னாட்டு உறுப்பினர்கள் பலர், இந்தி மொழியில் அனைத்தும் எழுதப்பட்டிருப்பது குறித்து தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர் என்றாலும், இப்பிரச்சினை பற்றி பாராளுமன்ற காரியாலயத்தில் புகார் செய்வார்களா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஆனால், இவர்கள் அனைவரும், பாராளுமன்ற காரியாலயங்களில் இந்தியைத் திணிக்கக் காணப்படும் ஆவேச உணர்ச்சியினைக் கண்டு, மனம் நொந்து போயிருக்கிறார்கள் என்பது மட்டும் உறுதி என்று தெரிகிறது!

சமூக சேவை செய்யுங்கள்!

வழக்கறிஞர்களுக்கு இந்திய தலைமை நீதிபதி அறிவுரை

இந்திய உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி மகாஜன், "வழக்கறிஞர்கள், சமூக சேவை என்ற பண்பாட்டினால் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்றும், பணம் சம்பாதிப்பது என்ற நோக்கத்துடன் அவர்கள் இருக்கக்கூடாது," என்றும் கூறியுள்ளார்.

பூனா வழக்கறிஞர்கள் சங்கம் அளித்த வரவேற்பு ஒன்றின்போது மேற்கண்டவாறு மகாஜன் கூறினார்.

கைரோவில் பேசிய தொழிற்கட்சியைச் சேர்ந்த முன்னாள் காலனி அமைச்சர் ஜேம்ஸ் கிரிபித்ஸ் என்பவர், 'சீட்டோ' பற்றி விவாதிக்க காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மாநாடு கூட்ட வேண்டுமென்று கூறியுள்ளார்.

திருச்சியில் அண்ணா பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னேமா? நாங்கள் என்ன அவ்வளவு அரசியல் ஏமாளிகளா? எங்களுக்குத் தெரியாதா — கம்யூனிஸ்டு களை, எல்லோரும் சேர்ந்து ஒழித்தான பிறகு, காமராசர், எங்களையே திருப்பி, 'ஒழிகிறாயா, அல்லது ஒழிக்கட்டுமா?' என்று கேட்பார் என்பது!

"தி. மு. கழகம், தங்கள் தந்தையர் ஆண்ட நாட்டை தனையர்களாவது மீட்டு, தலை நிமிர்ந்து நடக்கச் செய்ய வேண்டும்" என்னும் தன்னிகரில்லா லட்சியத்தை உடையது; அந்த இலட்சியத்தை மறந்து, அற்ப ஆசைகளுக்காக, பாரிடமும் தன்னை ஒப்படைத்து விடாது.

காமராசரை தி. மு. கழகம் பாராட்டுவதாகச் சொன்னதென்றால், அவர், ஆச்சாரியார் புகுத்திய ஆகாத கல்வித் திட்டத்தைக் கைவிட்டார் என்ற ஒரே காரணத்தினால் தான். காமராசர், மக்களுக்கு நல்லது செய்தால் பாராட்டவும் கூடாதா? காமராசரைமட்டுமல்லவே, ஆச்சாரியாரையும் கூடப் பாராட்டியிருக்கிறோம்; அவர், தஞ்சை விவசாயிகளுக்கும் பண்ணையாள் சட்டம் கொண்டு வந்தபோது, நாம் அவரைப் பாராட்டி ஆதரித்திருக்கிறோமே!

ஓமந்தூரார் செய்த நல்லவற்றைப் பாராட்டினோம்; அவர், இந்தியைப் புகுத்திய போது எதிர்த்தோம்; அதே போல, ஆச்சாரியார் தனது கல்வித் திட்டத்தைப் புகுத்தி அலிய அலிய வம்புச் சண்டைக்கு வரும் வரையில், நாம் அவருடன் மோதிக் கொண்டது கிடையாது!

ஜில்லா போர்டு தேர்தல் வருகிறது. அதில், காங்கிரஸ் கட்சியினரின் போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன், நேற்று வரையில் காங்கிரசை எதிர்த்துக்கொண்டிருந்தவர்களையெல்லாம் தன் பக்கம் இலவசப் பதவிகளைக் காட்டி இழுப்பது என்பது கண்டனத்துக்குரியது.

காங்கிரசிலே இருந்தவர் இடையிலே வெளியேறினர்; திரும்பவும் வருகிறேன் என்றால், எப்படிச் சேர்த்துக் கொள்ளலாம்? சேர்த்துக் கொள்வது கூடத் தவறல்ல; சேர்த்துக்கொண்டதும், பதவியையா காட்டுவது அவர்களுக்கு?

'காங்கிரசை விட்டுப் போனாய்—திரும்பவும்வந்திருக்கிறாயா; நன்கு ஆண்டுகள் சாதாரண உறுப்பினராக இரு; பிறகு பார்க்கலாம்'—என்று ஒரு கண்டிப்பான 'பத்தியம்' போட்டுமே; யாராவது காங்கிரசுக்கு மீண்டும் போகிறார்களா பார்க்கிறேன்!

ஒரு தனி மனிதனின் செல்வாக்கு ஒரு தொகுதி கட்டுப்படுகிறது என்று சொன்னால் ஜனநாயகம் என்ன ஆவது?

'இந்தத் தொகுதி எப்பொழுதுமே காங்கிரஸ்!'—சொல்லட்டுமே; பெருமைக்குரியது!

'இது என்றும் கம்யூனிஸ்டுகளுடைய தொகுதி—சொல்லட்டும்; பாராட்டுதலுக்குரியது!

'இது சமுகத்தவரை ஆதரிக்கும் பகுதி'—என்று பேசட்டும்; மகிழ்ச்சிக்குரியது!

ஆனால் விடுத்து, 'இவர் சொன்னால் இந்த மக்கள் கேட்பார்கள்.' என்று ஒரு தனி மனிதனின் சொல்லுக்கு, விருப்பத்திற்கு என்று ஒரு தொகுதி இருக்குமானால், அங்கே எப்படி ஜனநாயகம் வாழ முடியும்? இந்த நிலையை பொது மக்கள் அனுமதிக்கக் கூடாது.

துகில் உரித்த துச்சாதனன் துரோபதைக்கு மஞ்சள் அரைத்துத் தர வருகிறான் என்பதுபோல, காங்கிரசை முறியடித்துக் காட்டியவர்களைக் கொண்டே இப்போது காங்கிரசுக்கு ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி தேடித்தரச் சொல்லுவதா!

காமராசர் நம்மவர் என்று சொல்கிறார்கள்; சங்க இலக்கியங்களில் சொல்லப்படுவது போன்று, ஒருதலைபட்ச காதல் போல்தானே இருக்கிறது, நாங்கள் காமராசரை திராவிடர் என்பது! அவர் மறந்தாவது சொல்கிறாரா—'நான் திராவிடனே'—என்று!

திராவிடர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள சதி வழக்குகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம்தானே இருக்கின்றன? திராவிடன என்ற உணர்வு இருந்தால் காமராசர் அந்த வழக்குகளை ஏன் வாபஸ் வாங்கக் கூடாது?

நிலைமை இப்படி இருக்கையில், காமராசர் நம்மவர் என்பதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

நான் என்ன மறந்தாபோய் விட்டேன்—இதே திருச்சியில், சில ஆண்டுகளுக்குமுன், அவர், 'கழகக் கட்டை விரல்களை வெட்ட வேண்டும்,'—என்று கூறியதை!

'ஒன்று சேருங்கள்' என்று காமராசர் தஞ்சையில் பேசி இருக்கிறார்; எல்லாக் கட்சியினரும் ஒன்று சேரவேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது இப்போது?

வெளிநாட்டான் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காக்க, உள்நாட்டிலே பெரும் விபத்தைப் போக்க, வெள்ளம், புயல் இவைகளால் ஏற்படும் சேதத்தைச் சரிக்கட்ட, எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு வேலை செய்வது இயற்கை; இன்றியமையாததுங்கூட!

ஆனால், அமைதியான அரசியல் நடைபெறுகையில், எதற்காக ஒன்றுசேர வேண்டும்?

'எதிர்க் கட்சி தேவைதான்; ஆனால், அது இப்போது இல்லை,'—என்கிறார் காமராசர்!

கோவலனை இழந்துக் கொண்ட மாதவி போல், எதிர்க் கட்சியிலிருக்கும் ராஜா சிதம்பரங்களை, பதவிகளைக் காட்டி இழுத்துக் கொண்டால் எப்படி எதிர்க் கட்சி வளர முடியும்?

அரசியலில் ஒழுக்கம் இருந்தால்தானே ஜனநாயகம் வளர முடியும்?

அப்படி இருக்க, தி. மு. கழகத்தையும் காமராசர் [illegible] கொள்ளலாமா?

'திராவிடநாடு திராவிடருக்கு' என்ற [illegible] ஆகாரோ ஆகட்டும் நாடு, [illegible] இருந்ததே! மூன்றேகால் கோடிப் புகழ் ஆண்ட நாடு, அடிமை

தி.மு.க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

★

2—9—54:	கோடாச்சேரி: மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்
3—9—54:	நாகப்பட்டணம்: மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்
4, 5—9—54:	கோவை மாவட்டம்: உழவர் மாநாடு, பல்லடம்
9—9—54:	விருத்தாசலம்: தோழர் இராம. அரங்கண்ணல் திருமண நிகழ்ச்சி

முடை நாற்றம் வீசுகிறது!

இந்த இழிநிலையை மாற்றுகிற லட்சியத்தை உடையது தி. மு. கழகம்; அந்த லட்சியத்தைப் பற்றி எதுவுமே சொல்லாது, 'வாருங்கள், வாருங்கள்,' என்றால் எப்படி வர முடியும்?

வருகிற அக்டோபர் மாதத்தில் 5,000 தமிழர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வரவிருக்கிறார்கள்; தொடர்ந்து லட்சக் கணக்கான தமிழர்கள் வர இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் இங்கே வருகிற நேரத்தில், அவர்களுக்கு வாழ்வு தர வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது; அவர்களுக்கென்று இங்கே, வீடோ, வாசலோ, நிலமோ, வேலையோ இருக்காது; அத்தனையும் அவர்களுக்கு தேடித்தர, இங்குள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டாலும் இயலாது; அரசாங்கம், அவர்களுக்கென சில பல கோடி ரூபாய்களை ஒதுக்கி வேலை செய்தால்தான் சாத்தியம்.

பணப் பேழையை வைத்திருக்கும் மத்திய நிதி மந்திரி தேஷ்முக் அவர்கள், 'எதுவும் செய்ய இயலாது; எல்லாம் சென்னை அரசின் பொறுப்பு,' என்று கூறிவிட்டிருக்கிறார்.

இந்த நிலையில், காமராசர், அந்தப் பிரச்னையை, 'சாதாரணமானது,' என்று எண்ணுவதாக பத்திரிகையிலே பார்த்தேன்; அப்படியானால், அந்த இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் கண்ணீரைத் துடைப்பது யார்?

நான் காமராசரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்—வருகிற அக்டோபரில் வர இருக்கும் அந்த அகதிகளுக்கு, வாழ்வளிக்க இப்போதே திட்டம் தீட்டாவிட்டால் அவர்களின் நிலை மோசமாகிவிடும்; அவ்வாறு நேரிடாமல் தடுக்க, இப்போதே அவர், ஆவன செய்தாக வேண்டும்.

இன்று, திரு—கொச்சியில், தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; காமராசர் இதுபற்றி இன்றுவரை வாயே திறக்கவில்லை.

பட்டம் தாணு பேசுகிறார்—காமராசரும், சுப்ரமணியமும், படை கொண்டு வந்தே மலைபரவத்தைப் பிடித்துவிடுவார்கள்—என்று!

ஆனாலும், காமராசர், பட்டம் தாணுவை தட்டிக் கேட்கவில்லை!

திரு—தமிழரின், 'தாயகத்தோடு சேர வேண்டும்' என்ற உணர்வை, தமிழரான திராவிடரான காமராசர் உணர வேண்டாமா?

காமராசர், இவற்றிற்கெல்லாம்—இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு வாழ்வளிப்பது, திரு-தமிழர் போராட்டத்திற்கு உதவுவது போன்றவற்றிற்கும் உதவி கேட்டால், நாம் தரத் தயாராக இருக்கிறோம்.

நாட்டவரிடை இலவும் தரித்திரம், வறுமை, சாதி பேதம் ஒழியத் திட்டம் தீட்டி ஆதரவு கேட்டால், நிச்சயம் கிடைக்கும்.

இதை எல்லாம் விடுத்து, 'உள்ளே வாருங்கள்,' என்று கூவும் நூல் எதற்காக—கூப்பிடும் போக்கு என்—என்பதைத் தெரிவிக்காமலேயே கூப்பிட்டால் ஓடிவர முடியுமா?

எனவேதான், நாம் சொல்கிறோம்—நம்மைப் பொறுத்த வரை, காமராசர், நண்பருமல்ல; பகைவருமல்ல — என்று!

'உறவுக்கு இமயம்; எல்லைக்கு வேங்கடம்,' என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம், இன்று, திரு—தமிழர் போராட்டத்திற்கு ஆதரவு தரும் முறையில் 'நேருவை எதிர்த்துப் போரிட' முடிவு செய்திருக்கிறார்களாம்! வாழ்க அவர்கள்! வளர்க அவர்கள் புத்தி!"

பொதுச் செயலாளர் அவர்கள், இவ்வளவையும் கூறிவிட்டு, நாட்டு மக்களின் எதிர்கால திராவிட நாடு திராவிடர்க்காவதைத் தவிர வேறு சிறந்த திட்டமிருக்க முடியாது என்பதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

கழகக்கூட்டங்கள்

★

கொடாச்சேரி

காந்தி பூங்காவில்

2—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. ஏ. நீலமேகம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

★

நாகப்பட்டினம்

அவுரித் திடலில்

3—9—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

கே. ஏ. நீலமேகம்

★

பொன்மலை

மேலக்கற்கண்டார்கோட்டை கழக மைதானத்தில்

3—9—54 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

அம்பில் தருமலிங்கம்

எம். எஸ். மணி

திருமணம்

2—9—54 காலை 9 மணிக்கு செஞ்சி வட்டம் மல்லாண்டியில் தோழர் ஜெயராமன்—தோழியர் ஜெயலட்சுமி திருமணம் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

• • •

3—9—54 அன்று, சேலம் அம்மாப்பேட்டை, நெ 2, மார்க்கெட் தெருவில் தோழர் பி. எம். பெருமாள்—தோழியர் சரோஜினி சீர்திருத்தத் திருமணம் தோழர் ஈ. கே. தம்மண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், கே. ஆர் கோபால், கே. எஸ். மணி, கே. ஏ. வெங்கடாசலம், கே. ஏ. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருச்சியில்

'நம் நாடு' ஏஜண்டு

திருச்சிராப்பள்ளி திராவிடப் பண்ணை உரிமையாளர் தோழர் டி. வி. முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு 1—9—54 முதல் 'நம் நாடு' ஏஜண்டு (விற்பனை உரிமை) கொடுத்திருக்கின்றோம். 'நம் நாடு' இதழ் தேவைப்படும் தோழர்களும், உள்ளூர் சில்லறை விற்பனையாளர்களும் மேற்கண்டவர்களிடம் பதிவு செய்து கொண்டு முன்பணம் கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

ராயபுரம், சென்னை-13 1—9—54.	பொறுப்பாளர், 'நம் நாடு'

தூத்துக்குடி சதி..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி இருந்தார்கள்; மற்றக் கட்சிக்காரர்களும் ராஜாஜி கல்வித் திட்டத்தை எதிர்த்தார்களென்பது எனக்கு ஞாபகமில்லை; தீவிரமான காங்கிரஸ்காரர்களும் அந்தக் கல்வித் திட்டத்தை பலமாக எதிர்த்தார்களென்று எனக்குத் தெரியாது; காமராஜர் மந்திரிசபை பதவிக்கு வந்தபிறகு, கல்வித் திட்டம் புறக்கணிக்கப்பட்டது எனக்குத் தெரியும்; 14—7—53-ம் தேதி இரவு 9 மணிக்கு தி. மு. கழகத் தலைவர்களைக் கைது செய்ய உத்திரவிட்டேன்; 1-லிருந்து 5 எதிரிகள் பலதரப்பட்ட குற்றங்களைச் செய்யப்போவதாக தகவல் கிடைத்தது; ஆனால், பிராதுவரவில்லை; முதல், இரண்டாவது எதிரிகள், 14-ம் தேதி எந்த இடத்தில், எந்த நேரத்தில் கைது செய்யப்பட்டார்களென நேரம் தெரியாது; கைது செய்யப்பட்ட 1, 2-வது எதிரிகளை சம்பவத்துக்கு முன்னும் நான் பார்க்கவில்லை; எப்பொழுது 1, 2 எதிரிகள், சிமாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டு போகப்பட்டனர் என்று நேரம் தெரியாது; ரயில்வே பாலத்தில் சம்பவத்துக்கு முன்னால் பந்தோபஸ்து போடவில்லை; அதுபோல, புதுக்கிராமத்திலும், பிராமணர் தெருக்களிலும் சம்பவத்துக்கு முன்னால் பந்தோபஸ்து போடவில்லை; 15-ம் தேதிக்கு முன்னால் பந்தோபஸ்து வேண்டுமென்று ஒருவரும் கேட்கவில்லை; [illegible] காலை 6 மணிக்கு நான் போகும்பொழுது அங்கு கூட்டம் இருந்தது; அந்தக் கூட்டத்தில் திராவிட கழகமும் இருக்கிறது; அவர்கள் ஆபீசும் எனக்குத் தெரியாது; திராவிட கழக காரியதரிசிதான் எனக்குத் தெரியும்; அவரும் தலைவர்தான்; அவர் பெயர் மறந்துவிட்டது.

(டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட் சாட்சியம் முடியவில்லை; தொடர்ந்து வரும்.)

பாங்கி சிப்பந்திகள் வேலைநிறுத்தம்

சென்னையில் முடிவு செய்வர்

அகில இந்திய பாங்கி சிப்பந்திகள் பேரவை மாநாடு சென்னையில் செப்டம்பர் 18 முதல் 20-ம் தேதிவரை நடைபெறும்.

அந்த மாநாட்டில், இந்திய சர்க்கார் பாங்கித் தீர்ப்பை மாற்றியமைத்தது பற்றி பொது வேலைநிறுத்தம் செய்வது முடிவு செய்யப்படும் என்று பாங்கி சிப்பந்திகள் கழகச் செயலாளர் பிரபாகர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் [illegible] தோழர் இரா. செழியன் [illegible] அச்சகத்தில் அச்சிடப் பெற்று [illegible] வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.